1981 மார்ச் 31]

பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

—எதுவுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

(96) கோரிக்கை எண் 28-ன் மீதான சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82. (தமிழ், ஆங்கிலம்).

(97) கோரிக்கை எண் 39, சாலைகளும், பாலங்களும் மற்றும் கோரிக்கை எண் 52, சாலைகளும் பாலங்களுக்கான மூலதனச் செலவு ஆகியவற்றின் மீதான தமிழ் நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய 1980-81 ஆம் ஆண்டிற்கான ஆய்வுரையும், 1981-82 ஆம் ஆண்டுக்கான திட்டங்களும் (தமிழ், ஆங்கிலம்).

(98) தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும். (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1981).

(99) சமுதாய வளர்ச்சி கோரிக்கையைச் சார்ந்த நிதி இணைப்பு வெளியீடு 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

இணைப்பு I.

[....7 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 566-க்கான விடையைக் காண்க.]

பேரவை முன் வைக்கப்பெறும் விவர அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டம் வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான அகஸ்தியன் பள்ளி கிராமத்தில் உள்ள உப்பள நிலத்தை மத்திய அரசுக்கு குத்தகைக்கு விடப்பட்டது சம்மந்தமாக.

தஞ்சாவூர் மாவட்டம் வேதாரண்யம், அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் ஆலயத்துக்குச் சொந்தமான அகஸ்தியன் பள்ளி கிராமத்தில் உள்ள 2,400 எக்கர் உப்பள நிலம், ஆலய பரம்பரை